**தெற்கு ரயில்வே**
**மதுரை ரயில்வே பிரிவு**
**பணியிடத்தில் பாலியல துனபுறுததலைத் தடுத்தல்**

அரசியலமைப்பின் பிரிவு 51A(e), பெண்களின் கண்ணியத்திற்கு ஊறு விளைவிக்கும் நடைமுறைகளைக் கைவிடுவதற்கான பொறுப்பை ஒவ்வொரு குடிமகனுக்கும் அடிப்படைக் கடமையாக விதிக்கிறது.

1966 ஆம் ஆண்டு ரயில்வே சேவைகள் (நடத்தை) விதிகளின் விதி 3(C), பணிபுரியும் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தலைத் தடை செய்வதற்கான விதிகளைப் பின்வருமாறு கையாள்கிறது:

(1) எந்தவொரு இரயில்வே ஊழியரும் எந்தவொரு பணியிடத்திலும் எந்தவொரு பெண்ணிடமும் பாலியல் துன்புறுத்தல் செயல்களில் ஈடுபடக்கூடாது.

(2) பணி இடத்திற்குப் பொறுப்பான ஒவ்வொரு இரயில்வே ஊழியரும், அந்தப் பணி இடத்தில் எந்தவொரு பெண்ணுக்கும் பாலியல் துன்புறுத்தல் ஏற்படாமல் தடுக்கத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

விளக்கம் - (I) இந்த விதியின் நோக்கத்திற்காக,-

அ) "பாலியல் துன்புறுத்தல்" என்பது பின்வரும் செயல்கள் அல்லது நடத்தைகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றை (நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ) உள்ளடக்கும், அவையாவன:

i. உடல் ரீதியான தொடர்பு மற்றும் அத்துமீறல்கள்;
ii. பாலியல் சலுகைகளைக் கோருதல் அல்லது வேண்டுதல்;
iii. பாலியல் ரீதியான கருத்துக்களைத் தெரிவித்தல்;
iv. ஆபாசப் படங்களைக் காட்டுதல்;
v. பாலியல் தன்மை கொண்ட விரும்பத்தகாத வேறு எந்தவொரு உடல் ரீதியான, வாய்மொழி அல்லது சைகை ரீதியான நடத்தை.

ஆ) மற்ற சூழ்நிலைகளுடன் சேர்த்து, பின்வரும் சூழ்நிலைகள், பாலியல் துன்புறுத்தலின் எந்தவொரு செயல் அல்லது நடத்தை தொடர்பாக ஏற்பட்டால் அல்லது இருந்தால், அது பாலியல் துன்புறுத்தலாகக் கருதப்படலாம்:

i. வேலையில் முன்னுரிமை அளிப்பதாக மறைமுகமான அல்லது வெளிப்படையான வாக்குறுதி,
ii. வேலையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாக மறைமுகமான அல்லது வெளிப்படையான அச்சுறுத்தல்;
iii. அவரது தற்போதைய அல்லது எதிர்கால வேலை நிலை குறித்து மறைமுகமான அல்லது வெளிப்படையான அச்சுறுத்தல்,
iv. அவரது வேலையில் தலையிடுவது அல்லது அவருக்கு அச்சுறுத்தும், புண்படுத்தும் அல்லது விரோதமான பணிச்சூழலை உருவாக்குவது,
v. அவரது உடல்நலம் அல்லது பாதுகாப்பைப் பாதிக்கக்கூடிய அவமானப்படுத்தும் நடத்தை

## செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை

### செய்ய வேண்டியவை

- அரசியலமைப்பின் கீழ் பெண்களுக்குப் பின்வரும் அடிப்படை உரிமைகள் உள்ளன என்பதை நினைவில் கொள்ளுங்கள்:

    i. பாலின சமத்துவத்திற்கான உரிமை, பாலின அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதற்கு எதிரான உரிமை
    ii. எந்தவொரு தொழிலையும் செய்வதற்கோ அல்லது எந்தவொரு பணி, வர்த்தகம் அல்லது வணிகத்தை மேற்கொள்வதற்கோ உள்ள உரிமை
    iii. வாழ்வு மற்றும் சுதந்திரத்திற்கான உரிமை.

- வேலை செய்யும் இடங்களில் அவர்கள் கவனிக்கப்பட வேண்டும்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டம், நியாயமான மற்றும் மனிதாபிமானமான பணி நிலைமைகளை உறுதி செய்வதற்கும், மகப்பேறு நிவாரணம் வழங்குவதற்கும் அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்காகப் பணியிடங்களில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்
- இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் பெண்களின் கண்ணியத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் பழக்கவழக்கங்களைக் கைவிடுவது கடமையாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அத்தகைய செயல்களுக்கு எதிராக எச்சரிக்கையாக இருங்கள்.
- பணிக்கு உகந்த சூழலை உருவாக்கவும், அதைத் தக்கவைத்துக் கொள்ளவும் எப்போதும் முயற்சி செய்யுங்கள்.
- நமது மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், ஏற்றுக்கொள்ள முடியாத மற்றும் பாகுபாடு காட்டும் நடத்தைகளை ஒழிப்பதற்கும் நம் அனைவருக்கும் ஒரு கூட்டுப் பொறுப்பு உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- பெணகளின் உரிமைகள் மனித உரிமைகளே என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- ஊழியர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு, போதுமான தனிப்பட்ட பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்.
- பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தலைத் தடுக்கத் தேவையான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.
- ஏதேனும் மூன்றாம் தரப்பினர் அல்லது வெளியாளின் செயல் அல்லது செயலற்ற தன்மையின் விளைவாக பாலியல் துன்புறுத்தல் நிகழும்போது, பாதிக்கப்பட்ட நபருக்கு ஆதரவளிப்பதிலும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் தேவையான மற்றும் நியாயமான அனைத்து நடவடிக்கைகளையும் தவறாமல் எடுக்கவும்.
- பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான பாதிக்கப்பட்டவர்களுக்கு, குற்றவாளியை இடமாற்றம் செய்யக் கோருவதற்கோ அல்லது தாங்களே இடமாற்றம் பெற்றுச் செல்வதற்கோ ஆன வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.
- பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல், 1968 ஆம் ஆண்டு இரயில்வே சேவைகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின் கீழ் துறைரீதியான நடவடிக்கைக்கு உட்பட்டது
- பணியிடத்தில் பெண் ஊழியர்கள் மீதான துன்புறுத்தல் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்காக ஒவவொரு நிறுவனத்திலும் ஒரு 'துறை சார்ந்த புகார் குழு' உள்ளது. புகார் உள்ள எவரும் அதை அணுகலாம்
- பாலியல் துன்புறுத்தலுக்கான துறைரீதியான நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறக்கூடாது.

    a) ஒரு பெண்ணின் மானத்திற்குப் பங்கம் விளைவிக்கும் நோக்கத்துடன் அவர் மீது தாகுதல் நடததுவது அல்லது குற்றவியல் பலத்தைப் பயன்படுத்துவது, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 354-இன் கீழ் ஒரு பிணையில் வெளிவர முடியாத குற்றமாகும். இதற்கான தண்டனையாக 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

A
G

b) ஒரு பெண்ணின் கண்ணியத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் நோக்குடன் ஏதேனும் வார்த்தையை உச்சரிப்பது அல்லது ஏதேனும் சைகை செய்வது, பிரிவு 509-இன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். இதற்கு ஒரு வருடம் வரை சாதாரண சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படலாம்.

<u>செய்யக்கூடாதவை</u>

- பெண்களின் அடிப்படை உரிமைகளை மீற வேண்டாம், ஏனெனில் அவை அரசியலமைப்பின் 32வது பிரிவின் கீழ் செயல்படுத்தப்படக்கூடியவை, எனவே, சட்ட நடவடிக்கைக்கு வழிவகுக்கும்.
- பெண்களுக்காகச் செய்யப்பட்ட சிறப்பு விதிகளைக் குறை கூற வேண்டாம், ஏனெனில் அவை இந்திய அரசியலமைப்பின் வரம்பிற்குள் செய்யப்பட்டுள்ளன.
- தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 66-இன் படி, காலை 6.00 மணி முதல் மாலை 7 மணி வரையிலான நேரங்களைத் தவிர, வேறு எந்த நேரத்திலும் எந்தவொரு தொழிற்சாலையிலும் எந்தப் பெண்ணும் வேலை செய்யக் கோரப்படவோ அல்லது அனுமதிக்கப்படவோ கூடாது.
- பெண் ஊழியர்கள் மற்றும் சக பணியாளர்களிடம் உரிய மரியாதையைக் காட்ட மறக்காதீர்கள்.
- எந்தவொரு ஊழியரும் பணியிடத்தில் ஒரு பெண் ஊழியரை பாலியல் ரீதியாக துன்புறுத்தக்கூடாது. அவ்வாறு செய்தால், நீங்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாவீர்கள்.
- பெண் ஊழியர்களிடம் உடல் ரீதியான தொடர்பில் ஈடுபடவோ அல்லது நேரடியாகவோ மறைமுகமாகவோ தவறாக நடக்கவோ வேண்டாம். இல்லையெனில், அது பாலியல் துன்புறுத்தலாகக் கருதப்படும்.
- பெண் ஊழியர்கள் மீது பாலியல் ரீதியான கருத்துக்களை ஒருபோதும் தெரிவிக்க வேண்டாம்.
- எந்தவொரு ஊழியரும் எந்தவொரு பெண் ஊழியருக்கும் ஆபாசப் படங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காட்டவோ அல்லது காட்ட முயற்சிக்கவோ கூடாது.
- எந்தவொரு பெண் ஊழியரிடமும் பாலியல் தன்மை கொண்ட விரும்பத்தகாத உடல் ரீதியான, வாய்மொழி அல்லது சைகை ரீதியான நடத்தையில் ஒருபோதும் ஈடுபட வேண்டாம்.
- பெண் ஊழியர்களை பாலியல் பொருளாக நடத்த வேண்டாம்.
- பெண் ஊழியர்களை அவர்களின் வேலைவாய்ப்பு தொடர்பாக பாதகமான நிலையில் வைக்க வேண்டாம்.

<u>துறை சார்ந்த புகார் குழு</u>

| வரிசை எண். | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | டாக்டர். ரா. ரேவதி | உதவி தலைமை மருத்துவ கண்காணிப்பாளர்/ இரயில்வே மருத்துவமனை/ மதுரை |
| 2 | திரு. வி.சுவாமிநாதன் | மூத்த கோட்ட பணியாளர் அதிகாரி/ மதுரை |
| 3 | செல்வி .த.மோகனப்பிரியா | கோட்ட வணிக மேலாளர்/ மதுரை |
| 4 | திருமதி. அட்லின் ஸ்டெல்லா ராஜ்குமார் | உறுப்பினர் (அரசு சாரா தொண்டு நிறுவனம்) |

**ஆதாரமற்ற முறையில் பாலியல் துன்புறுத்தல் புகார் அளிக்க வேண்டாம். அது குறிப்பாகப் புகார் அளிப்பவரின் நம்பகத்தன்மையையும், பொதுவாகப் பெண்களின் கண்ணியத்தையும் கடுமையாகப் பாதிக்கும்.**